# சித்தரில் புத்தர்

**க. ராஜ்குமார்**
*முனைவர்பட்ட ஆய்வாளர்*
*தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம்*
*சேர்க்காடு, வேலூர்*

**முனைவர் க. சிங்காரவேலு**
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,*
*சேர்க்காடு, வேலூர்*

**ஆய்வுச்சுருக்கம்**
*'சித்' என்ற சொல்லே சித்தம் என்ற பொருண்மையினை அடியொற்றி எழுப்பப்பட்டதாகும். சித்தத்தை அறிந்து கொண்டவர்கள் சித்தர்கள் எனப்பட்டனர். அப்படி சித்தர்களாக நூற்றியெட்டு சித்ததர்கள் உள்ளதாக சான்றோர்கள் குறிப்பிடுகின்றனர். இவர்களைத் தவிர்த்து பல சித்தர்கள் இன்றும் உள்ளதாகபக்தியிலக்கிய ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சித்தர்களின் ஞான வழி என்பது தன்னை அறிதல். தான்எனும் அகந்தையை ஒழித்தால் இறைவனை அடையலாம். இதுபோன்ற அரிய கருத்துக்களை சித்தர்கள்பாடியுள்ளனர். ஏறத்தாழ புத்தரும் ஒரு சித்தரே எனலாம். ஏனெனில் சித்தர்களின் இக்கருத்துக்களையும் புத்தரின் பொன்மொழிகளையும் ஒப்புநோக்கினால் ஒரு நேர்க்கோட்டில் வைத்துப் பார்த்தால் இரண்டும்ஒரே மாதிரியான சம அளவுகோலைப் பெற்றிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. சித்தர்களில் பலசமூகம் சார்ந்த கருத்துக்களை தமது பாடலில் பாடிய சிவவாக்கியரின் பாடல்களை புத்தரின்கருத்துக்களோடு ஒப்பிடுவது இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.*

***திறவுச்சொற்கள்:*** *சித்தபுத்தர், அகவழிச்சேறல், உண்மைகூறல், மெய்வாழ்வு, நாதன்*

## முன்னுரை

சித்தர்கள் என்பவர்கள் பல்வேறு நூற்றாண்டுகட்கு முன்பு வாழ்ந்தவர்கள். ஆனால் புத்தர் என்பவர் தற்கால கட்டத்தில் வாழ்ந்தவர் இப்படியிருக்க பல்லாயிரக்கணக்கான வருடமாக வழிபாட்டு முறையில் முதன்மையிடம் வகிக்கின்ற சித்தர்களுக்கு இணையாக புத்தரை ஒப்பிடுவதா? என்ற கேள்வியும் எழலாம். புத்தர் பற்றிய நாம் அறிந்திராத பல அரிய தகவல்கள் உள்ளன. அவற்றை நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். புத்தர் கிறிஸ்து பிறப்பதற்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்னரே பிறந்து வாழ்ந்தவர் என்றும் மிகப்பழமையான பௌத்த வழிபாட்டுத் தலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நேபாளத்தின் அகழ்வாராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். இத்துடன் ஒப்பிடும்போது வரலாற்றுத் தளத்தில்சித்தர்களுக்கு புத்தர் இணையானவர் என்பதை அறியலாம்.

## சித்தர்

சித்தர்கள் என்போர் எல்லாவற்றையும் தம் அறிவால் உணர்ந்த ஆன்றோர் ஆவர். மருத்துவத்தில் ஆழங்கால்பட்டவர்கள். யோகம் பெறும்பொருட்டு காயகல்ப மருந்துகளைக் கண்டுபிடித்து அதை நிருபித்துக் காட்டியவர்கள். அம்மருந்துகளைச் செய்வதற்கான சூத்திரங்களைப் பல்வேறு வகையான ஓலைச்சுவடிகளில் எழுதிவைத்துள்ளனர். இன்றைய மருத்துவ உலகில் மருந்துகள் கிடைக்காத நோய்தன்மை அறிய முடியாத புதுவகையான நோய்கள் உருவாகும் காலத்தில் மனித உடலில் எத்தனைவகையான நோய்கள் வரும். அவற்றிற்கு எந்த மருந்து கொடுக்கப்பட வேண்டும். எந்த விகிதத்தில்கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிட்டுள்ளனர். மேலும் பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் நிலவி வந்த அக்காலக்கட்டத்திலே பல அரிய முற்போக்கான சிந்தனைகளையும் சமூகத்திற்கு முன்பாக விதையாகதூவியுள்ளனர். அவர்கள் பாடல்களின் வழியாக சமூகத்திற்கு எழுப்பும் கேள்வியிலேயே அதனை நாம்அறியலாம்.

## சிவவாக்கியார் எனும் சித்த புத்தர்

சித்தர் பாடல்களில் அதிகப் பாடல்கள் பாடியவர் என்ற புகழினை உடையவர். சிவாயமே என்றஅடியைத் தொடர்ந்து தம் பாடலின் இறுதி சீராகப் பல பாடல்களில் பாடியதால் இவர் 'சிவவாக்கியார்' எனப்பட்டார். வைணவராக இருந்து பிறகு சைவராக மாறியதாகவும் கூறுவர். சமூகத்தின் இழிவான செயல்களைத் தம் பாடல்களில் குறிப்பிடுபவர்.

> "வடிவுகண்டு கொண்டபெண்ணை மற்றொருவன் நத்தினால்
> விடுவனோ அவனைமுன்னர் வெட்டவேணும் என்பனே
> நடுவன்வந்து அழைத்தபோது நாறும்இந்த நல்லுடல்
> சுடலைமட்டும் கொண்டுபோய்த் தோட்டிகைக் கொடுப்பரே" (சிவவாக்கியம்.6)

ஒருவனுக்கு உரிய பெண்ணை பிறன் விரும்பினால் வெட்டுவேன் என்று சூளுரைக்கும் மனிதர்கள்நடுவனான இறைவன் எடுத்துக்கொள்ளும் போது மட்டும் எத்தகைய செயலும் செய்ய முடியாதக தியற்றவர்கள் ஆகிவிடுவதைக் குறிப்பிடுகிறார்.

**நம்முள் இருக்கும் இறைவன்**

பரம்பொருளாகிய இறைவன் நமக்குள்ளே இருக்கிறான். அதனை அறிந்து கொள்வார் பிறரில்லை.அதனை நாம் அறிந்துகொண்டால் முழுகதி அடையலாம் என்பதை சிவவாக்கியர்,

"என்னிலே இருந்தஒன்றை யான்அறிந்தது இல்லையே
என்னிலே இருந்த ஒன்றை யான்அறிந்து கொண்டபின்
என்னிலே இருந்தஒன்றை யாவர்காண வல்லரோ
என்னிலே இருந்திருந்து யான்உணர்ந்து கொண்டெனே" (சிவவாக்கியம்.7)

உலகம் தோன்றுதற்கு முன்னரே நமக்குள் இறைவனும் இறைவனுக்குள் நாம் என இரண்டறக் கலந்திருந்ததாக இறைவனை முன்னிறுத்திப் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனை

"அனைத்துமாய் அகண்டமாய் அனாதிமுன் அனாதியாய்
எனக்குள் நீ உனக்குள்நான் இருக்கும் ஆறுஆறு எங்ஙனே" (சிவவாக்கியம்.8)

எல்லாமும் நீயாக இருப்பதால் எனக்குள் நீ இருப்பது தெரிகின்றது. எல்லாம் நீயாகவே இருப்பதால் உனக்குள் நான் இருப்பம் தெரிகிறது இதனால் நானும் உன்னோடு சேர்ந்து உன்னைப் போல் எங்குமாகஎப்போதுமாக இருக்க முடியும் என்பதை நினைத்து "எங்ஙனே?" என்று வியப்பதையும் காண முடிகிறது.

**நிலையானவற்றில் கவனம் கொள்**

மனிதர்கள் தாங்கள் வாழ்வதற்கு நீளமான பெரிய வீடுகளைக் கட்டிக்கொண்டு பெரிய கதவுகளை வைத்துக்கொண்டு மாளிகைப் போன்ற தோற்றத்தைக் கொண்ட வீட்டில் வாழ்வதற்கு ஆசைப்படுவர்.காலன் எனும் தூதுவன் வந்து அழைத்துச் செல்லும் போது வீடு முதலிய சொத்துக்கள் நிலையானவையாக நம்மிடம் வரப்போவதில்லை. நமக்கு நிலையான சொத்தாக இருப்பவை ஆலகால நஞ்சை உண்டு போற்றுதற்குரிய சிவன் மற்றும் உமையம்மையின் பாதங்களே நமக்கு நிலையானவையாகும் என்று நிலையானவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை சிவவாக்கியர்,

"நீளவீடு கட்டுநீர் நெடுங்கதவு சாத்துநீர்
வாழவேணும் என்றலோ மகிழ்ந்திருந்த மாந்தரே
காலன்ஓலை வந்தபோது கையகன்று நிற்பிரே
ஆலமுண்ட கண்டர்பாதம் அம்மைபாதம் உண்மையே" (சிவவாக்கியம்.25)

என்று குறிப்பிடுவதை அறியலாம்.

**மெய் வாழ்வு**

வீடு என்பது நிலையானது அல்லாத பொய்யானதாகும். வேள்வி செய்வது என்பது நிலையான மெய்யானதாகும். மனிதர்கள் தங்கள் மெய்யான வாழ்வை உணர்ந்து வாழ வேண்டும். இதனை,

"வீடெடுத்து வேள்விசெய்த மெய்யினோடு பொய்யுமாய்
மாடுமக்கள் பெண்டிசுற்றம் என்றிருக்கும் மாந்தர்காள்
நாடுபெற்ற நடுவர்கையில் ஓலைவந்து அழைத்திடில்
ஓடுபெற்ற அவ்விலை பெறாதுகாண் இவ்வுடலமே" (சிவவாக்கியம். 26)

ஆகையால் மெய்யானதைத் தேடி அதில் நாட்டம் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

**ஆண் பெண் - சமத்துவம்**

ஆண் பெண் சமத்துவத்தினை சிவவாக்கியார், மண்ணில் வாழும் மனிதர்களாயினும் சரிவிண்ணிலும் வாழும் தேவர்கள் முதலிய அனைவரும் சரி அனைவரும் பெண்ணின் வழியாகவே பிறந்தோம்என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என்பதை,

"பெண்ணும் ஆணும் ஒன்றலோ பிறப்பதற்கு முன்னெலாம்
கண்ணில்ஆணின் சுக்கிலம் கருவில்ஓங்கும் நாளிலே
மண்ணுளோரும் விண்ணுளோரும் வந்தவாறு எங்ஙனே" (சிவவாக்கியம்.28)

என்பதை இப்பாடல் வழி எடுத்துரைக்கிறார்.

**மெய் தெய்வம் வழிபடல்**

உண்மையான மெய் தெய்வத்தினை வழிபட வேண்டும். உலகம் முழுமைக்கும் முதன்மையானவனாகிய தெய்வத்தின் இருப்பை அறிந்து உணர்ந்த ஞானிகள் முற்காலத்தில் இப்படி அறிந்த முறையை யாராலும் அறிய முடியாது, பரம்பொருள் தவிர வேறு ஒன்றையும் சொல்ல இயலாது,ஆகையால் மெய் தெய்வத்தினை வழிபடுவதேயன்றி கோயிலில் காணப்படும் தெய்வத்தைப் பார்த்து நான்கையெடுத்துக் கும்பிடுவதில்லை என்று சிவவாக்கியர் குறிப்பிடுவதை,

"அண்டர்கோன் இருப்பிடம் அறிந்துஉணர்ந்த ஞானிகாள்
பண்டறிந்த பான்மைதன்னை யாரறிய வல்லரே
விண்டவேத பொருளையன்றி வேறுகூற வகையிலா
கண்டகோயில் தெய்வமென்று கையெடுப்பதில்லையே" (சிவவாக்கியம்.30)

என்ற பாடலின் வழியாக குறிப்பிடுகிறார்.

**எல்லாம் நமக்குள்ளே**

பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் மனிதர்களாகிய நமக்குள்ளே அமைக்கப்பெற்றுள்ளது எனும்கருத்தைப் பறைசாற்றும் விதமாக,

"கோயிலானது ஏதடா குளங்களாவது ஏதடா
கோயிலும் குளங்கடும் கும்பிடும் குலாமரே

கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே
ஆவதும் அழிவதும் இல்லைஇல்லை இல்லையே"
(சிவவாக்கியம்.35)

கோயிலில் கும்பிடுவோர், குளத்து தீர்த்தங்களை நம்புவோர்கள் என வழிபடுபவர்களே! அக்கோயிலும்குளமும் நம் மனத்திற்குள்ளேயே உள்ளன. இப்படி உணர்வதால் தவறு உண்டாவது இல்லை. மேலும்,இருப்பவை அழிவது அறவே இல்லை என்ற தத்துவார்த்த கொள்கையை பறை சாற்றுகிறார்.

**அகவழிச் சேறல்**

இறைவனை உருவமாக எண்ணி வணங்கி மனதில் நினைத்து இறைவனை அடைய முடியும் என்று நம்புவோரைப் பழிக்கும் விதமாக,

"செங்கலும் கருங்கலும் சிவந்தசாதி லிங்கமும்
செம்பிலும் தராவிலுஞ் சிவனிருப்பன் என்கிறீர்
உம்மதம் அறிந்துநீர் உம்மைநீர் அறிந்தபின்
அம்பலம் நிறைந்தநாதர் ஆடல்பாடல் ஆகுமே"
(சிவவாக்கியம்.36)

கண்ணுக்குத் தெரிகின்ற செங்கல்லால் ஆன உருவத்தாலும், கருங்கல்லால் ஆன உருவத்தாலும், சாதிலிங்கத்தினால் (வைப்பு பாடாண வகை) ஆன உருவத்தினாலும், செம்பினாலும் தராவிலும் (உலோகங்கள்) செய்த வடிவங்களை வணங்குபவர்களே அதைச் சிவன் இருப்பிடமாகக் கொண்டு கூறுபவர்களே! உம்மதக் கொள்கையின்படி அறிந்ததை இப்படிக் கொண்டாடுகிறீர்கள். ஆனால் உங்களை நீங்கள் அறிந்துகொண்டு அகப்பூசை செய்து அகத்தில் இறைவனை உணர்ந்து அகவழியில் சேர்ந்தால்அங்கு அம்பலத்தாடுகின்ற நாதனுக்கு பிறர் பாடும் துதிகள் கேட்பீர்கள் என்று உரைக்கின்றார்.

**நெஞ்சை உட்கலந்து உண்மைகூறல்**

வழிபாடானது மனிதர்களின் உண்மையான உள்ளத்திலிருந்து செய்யப்படவேண்டும். நான்கு வேதமாகிய ரிக் யஜுர், சாம, அதர்வண ஆகிய அனைத்து வேதங்களையும் ஓதினாலும், உடல் முழுக்க திருநீறு பூசினாலும், தாங்கள் கண்ட அனைத்தும் தெய்வம் என்று பிதற்றிக் கொண்டிருந்தாலும், அங்கு எங்குமே கடவுள் இல்லை என்பதே உண்மை. மனதில் அன்பு கொண்டு அன்பால் உருகி நம் நெஞ்சம்கலந்து இருக்கும் இடத்தில் கடவுள் இருக்கிறார் இதனை அறிந்தாலே அவரை தொழுதுகொள்ள முடியும் என்பதை,

"இருக்குநாலு வேதமும் எழுத்தைஅற வோதிலும்
பெருக்கநீறு பூசினும் பிதற்றிலும் பிரான்இரான்
உருக்கிநெஞ்சை உள்கலந்து உண்மைகூற வல்லிரேல்
சுருக்கமற்ற சோதியைத் தொடர்ந்துகூடல் ஆகுமே" (சிவவாக்கியம்.38)

என்று குறிப்பிடுவதிலிருந்து அறிய முடிகிறது.

**பகுத்துப் பார்த்தல்**

இறைவனை அடைய நினைப்பவர்கள் அனைத்தையும் பகுத்துப் பார்த்து மெய்வழியை உணரவேண்டும். தவிர பிறப்பால் வேறுபாடுகளைக் குறிப்பிடுகிற சாதிய எண்ணங்கள் அறவே இருக்கக் கூடாது என்றும் குறிப்பிடுகிறார். இதனை,

"பறைச்சியாவது ஏதடா பணத்தியாவது ஏதடா
இறைச்சிதோல் எலும்பினும் இலக்கம்இட்டு இருக்குதோ
பறைச்சி போகம் வேறதோ பணத்திபோகம் வேறதோ
பறைச்சியும் பணத்தியும் பகுத்துப்பாரும் உம்முளே" (சிவவாக்கியம்.40)

என்று இறைவனின் படைப்பில் மனிதர்கள் அனைவரும் சமம் எனும் சமூக நீதிக் கருத்தை சிவவாக்கியார் முன்மொழிகிறார்.

**நாதன் உள் இருத்தல்**

கல் ஒன்றை நட்டு வைத்துவிட்டு அதனுள் நாதனாகிய இறைவன் இருக்கின்றான் என்று நம்புகின்றவர்களை, மக்களால் நட்டு வைத்த கால்லானது ஒரு தெய்வமாக நினைத்து நான்கு பூக்கள்சொரிந்து சுற்றி வந்து மனத்துள்ளே முணு முணுத்து மந்திரங்கள் என்று கூறி வழிபடுகின்றவர்களே மந்திரம்என்பது எது என்பதை அறியுங்கள்! நட்ட கல்லானது பேசுமா? அதற்குள் நாதனாகிய இறைவன் இல்லை.நாதன் நமக்குள் தான் இருக்கிறான். அதை உணராதவர்களே நட்ட கல்லை தெய்வமென்றுவழிபட்டுக்கொண்டிருப்பார்கள்.

ஆகையால், நாதன் உள் இருப்பதை அறிந்து கொள்ளுங்கள் என்றுதெய்வம் நமக்குள் இருக்கிறார் என்பதை அறிய முற்படுங்கள் என்பதை,

"நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பஞ் சாத்தியே
சுற்றிவந்து மொணமொணென்று சொல்லும் மந்திரமேதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள் இருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ"
(சிவவாக்கியம். 520)

என்ற பாடலின் மூலம் குறிப்பிடுகிறார்.

**முடிவுரை**

சித்தர்கள் மனித வாழ்விற்கு தேவையான பல்வேறு பயனுள்ள தகவல்களை தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். மருத்துவம் மட்டுமல்லாது வழிபாட்டு முறைகளையும் குறிப்பிட்டுள்ளனர். சமூகத்துடன்மனிதன் கொள்ள வேண்டிய

உறவுமுறையையும் மனிதனை சக மனிதனாக எண்ண வேண்டும் என்றசமத்துவ கொள்கைகளையும் போதித்தது மட்டுமின்றி அதனைப் பின்பற்றியும் வாழ்ந்துள்ளனர். புத்தரின் பொன் மொழிகள் உலகில் மனிதனின் நடத்தைகளைக் குறிப்பிட்டு பல்வேறு அறிஞர்கள்போற்றும் விதமாக உள்ளது. உலகில் உள்ள மத வழிபாட்டு முறைகளில் புத்தமும் ஒருவகை மதமாகக்கொண்டு பல்வேறு நாட்டிலுள்ள மக்களால் வழிபாட்டு முறை கடைபிடிக்கப்படுகிறது. புத்தரின்கொள்கைகள் பற்றற்று இருத்தல், சமத்துவம் போன்ற நெறிமுறைகளை உள்ளடக்கியது. சிவ வாக்கியர் தமது பாடல்களில் அதிகமாக சமூக நீதி கருத்துக்களை முன்மொழிகிறார். ஆண்பெண் சமத்துவம், பிறப்பில் உயர்வு தாழ்வு இன்மை, போன்ற புத்தரின் பொன்மொழிகளுக்கு இணையான அல்லது புத்தரின் கொள்கைகளுடன் இடையேயுள்ள ஒற்றுமையைக் காண முடிகிறது. இறைவனை வழிபடுவதற்கான காரணம் முதற்கொண்டு, வழிபடும் முறையையும் குறிப்பிடுகிறார். அதுமட்டுமின்றி தவறான புரிதலுடன் இறைவனை தலத்திலும் உருவத்தாலும் எண்ணி வழிபடும்மனிதர்களின் நிலையைக் குறிப்பிட்டு இறைவனை அகவழியில் சேர்வதற்கான முறையையும் குறிப்பிடுகிறார். கால அடிப்படையில் நோக்கும்போது சித்தர்களுக்கு முன்பு புத்தரா அல்லது புத்தருக்கு முன்புசித்தர்களா? என்ற அடிப்படையான கேள்வி எழலாம். கால ஆராய்ச்சி என்று வரும்போது சித்தர்களைப்பற்றிய தகவல்கள் ஆய்வுக்குட்பட்டவை. ஆகவே சித்தர்கள் உலகிற்கு உணர்த்திய கருத்துக்களின் வழியேபுத்தரின் கருத்துக்களோடு ஒப்பிட்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது. சித்தர்களில் சிவவாக்கியரின் கருத்துக்கள் புத்தரின் கொள்கைகளுடன் ஒப்புநோக்கும் போது இரண்டும் சரிக்கு சரிநிகராக அமையும்என்பதில் எவ்வித ஐயமுமில்லை. சித்தர்கள் பலர் இருக்க சமூக நீதியை, சமத்துவத்தைப் பாடிய சிவவாக்கியர "சித்தரில் புத்தர்" என்று குறிப்பிடுவது பொருத்தமானதாக அமைகிறது.

**பார்வை நூல்கள்**

சித்தர் பாடல்கள் மூலமும் உரையும். உரையாசிரியர்.இளமுனைவர் தமிழ்ப்பிரியன்

சித்தர்கள் ஒரு கண்ணோட்டம். மா.ந. திருஞானசம்பந்தன்.

புத்தர் எண்ணங்களற்ற இதயத்திற்கு சொந்தக்காரர். ஓஷோ.